# நவம்பர் – 28 – வெள்ளி

புனித கத்தரின் லபுரே

மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்''- லூக் 21:19

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 15 : 1 – 4

சகோதர சகோதரிகளே! பின்பு பெரியதும் வியப்புக்குரியதுமான மற்றோர் அடையாளத்தை விண்ணகத்தில் கண்டேன். ஏழு வானதூதர்கள் ஏழு வாதைகளைக் கொண்டிருந்தார்கள். இறுதியான அந்த வாதைகளோடு கடவுளின் சீற்றம் முற்றிலும் தணியும். நெருப்போடு கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒன்றையும் கண்டேன். தொடர்ந்து, விலங்கின்மீது அதன் சிலைமீதும் எண்ணால் குறிக்கப்பெற்ற அந்த ஆள்மீதும் வெற்றி பெற்றவர்கள், கடவுள் கொடுத்திருந்த யாழ்களை ஏந்திய வண்ணம் கண்ணாடிக்கடல் அருகே நின்று கொண்டிருக்கக் கண்டேன்.அவர்கள் கடவுளின் பணியாளரான மோசேயின் பாடலையும் ஆட்டுக்குட்டியின் பாடலையும் பாடிக் கொண்டிருந்தார்கள் ”கடவுளாகிய ஆண்டவரே, எல்லாம் வல்லவரே, உம் செயல்கள் பெரியன, வியப்புக்குரியன. மக்களினங்களின் மன்னரே, உம் வழிகள் நேரியவை, உண்மையுள்ளவை.ஆண்டவரே, உமக்கு அஞ்சாதவர் யார்? உமது பெயரைப் போற்றிப் புகழாதார் யார்? நீர் ஒருவரே தூயவர், எல்லா மக்களினங்களும் உம் திருமுன் வந்து வணங்கும். ஏனெனில் உம் நீதிச் செயல்கள் வெளிப்படையாயின.”

**பதில்பாடல் :** எல்லாம் வல்லவரே உம் செயல்கள் வியப்புக்குரியன.

## நற்செய்தி : லூக்கா 21 : 12 - 19

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களுக்குக் கூறியதாவது : இவை அனைத்தும் நடந்தேறுமுன் அவர்கள் உங்களைப் பிடித்துத் துன்புறுத்துவார்கள். தொழுகைக்கூடங்களுக்குக் கொண்டு செல்வார்கள். சிறையில் அடைப்பார்கள். என் பெயரின்பொருட்டு அரசரிடமும், ஆளுநரிடமும் இழுத்துச் செல்வார்கள்.எனக்குச் சான்று பகர இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும். அப்போது என்ன பதில் அளிப்பது என முன்னதாகவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதை உங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் நானே உங்களுக்கு நாவன்மையையும், ஞானத்தையும் கொடுப்பேன். உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும்இ எதிர்த்துப் பேசவும் முடியாது.ஆனால், உங்கள் பெற்றோரும், சகோதரர் சகோதரிகளும், உறவினர்களும், நண்பர்களும் உங்களைக் காட்டிக்கொடுப்பார்கள். உங்களுள் சிலரைக் கொல்வார்கள்.என்பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பார்கள்.இருப்பினும் உங்கள் தலைமுடி ஒன்றுகூட விழவே விழாது.நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்“ என்றார்.

**தியானம் :** இன்று கடவுளுக்கு எதிராக கதைப்பவர்களும் நம்பிக்கை அற்றவர்களும் அதிகமாக வாழ்கின்றார்கள். குறிப்பாக இளம் சமுதாயம் நம்பிக்கை இல்லாத வழியில் வாழ முற்படுகின்றனர். வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகம் நம்பிக்கையை அவர்களிடம் இருந்து பறிக்கப் பார்க்கின்றது. அன்று ஆதிமனிதன் விலக்கப் பட்ட கனியை உண்டதால் ஆடை அணிந்தான். இன்று பலர் ஆடை துறக்கின்றனர். எவ்வளவு குறைவான ஆடை அணியலாமோ அதை அணிகின்றார்கள். இது மற்றவர்களை பாவத்தில் வீழ்த்துகின்றது. நம்மை பாவத்தில் வீழ்த்தக் கூடிய வகையில் நம்மை சுற்றியுள்ள சூழல் இருக்கின்றது. எனவே நாம் மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். எமது பிள்ளைகளையும் சிறு வயதில் இருந்தே சொல்லி வளர்க்க வேண்டும். பிள்ளைகள் வீட்டில் நிற்பதை விட வெளி இடங்களில் தமது நேரத்தை செலவு செய்கின்றார்கள். முக்கியமாக பாட சாலைகள் அவர்களின் பிரதானமான இடமாக இருக்கின்றது. அங்கிருந்துதான் அவர்கள் பலவற்றை அறிந்து கொள்கின்றார்கள். அது அவர்களின் வாழ்வில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. உறவுகள் சீராக இருக்க நாம் குடும்பத்திற்காக பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர்களிடம் மனம் விட்டு பேச வேண்டும். நாங்கள் சொல்லவதை மட்டும்தான் அவர்கள் கேட்க வேண்டும் என்று மட்டும் இருந்துவிடாமல். அவர்களின் கருத்துக்களுக்கும் நாம் இடம் கொடுக்க வேண்டும். அப்போது நல்ல புரிதல் ஏற்படும். எனவே நல்ல உறவுகளும் அன்புப் பிணைப்பும் இருந்தால் நாம் நலமாய் வாழ முடியும். மன உறுதியுடன் யேசுவின் வழியை பின்பற்றி வாழ்வோம்.